ஜூன் ....
.... 2019

விண்மீன்.காம்

# முதலாவது வார நடப்பு நிகழ்வுகள்

01 ஜூன் – 08 ஜூன்

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.** நிதியியல் கல்வி வாரம் என்பது பின்வரும் எந்த இந்திய அமைப்பின் முயற்சியாகும்?

A) இந்திய ரிசர்வ் வங்கி ☑

B) மத்திய நிதியமைச்சகம்

C) செபி

D) ஐ ஆர் டி ஏ




✓ இந்திய ரிசர்வ் வங்கி, ஜூன் 3 முதல் 7 வரை நாடு முழுவதும் நடப்பாண்டு நிதியியல் கல்வி வாரத்தை கடைப்பிடிக்கவுள்ளது. “Farmers and How they Benefit by being a Part of The Formal Banking System – விவசாயிகள் மற்றும் முறையான வங்கியியல் அமைப்பின்கீழ் விவசாயிகள் பெறும் நன்மை” என்பது நடப்பாண்டில் வரும் இவ்வாரத்துக்கான கருப்பொருளாகும்.

✓ வேளாண் பெருங்குடி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மற்றும் நிதியியல் கல்வியறிவு செய்திகளைக் கொண்டுசெல்ல அவர்கள் நலன் சார்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

✓ வங்கிகள் தங்கள் கிராமப்புற கிளைகள், நிதியியல் கல்வி மையங்கள், ATM மற்றும் வலைத் தளங்களில் இந்தச் சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை காட்சிப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளன. விவசாயிகளிடம் அவர்களுக்குத் தேவையான நிதியியல் விழிப்புணர்வு செய்திகளைக் கொண்டு செல்ல, மையப்படுத்தப்பட்ட மக்கள் ஊடக பரப்புரையை தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலியில் இந்திய ரிசர்வ் வங்கி இம்மாதம் மேற்கொள்ளவுள்ளது.

**2.** மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திடம் அண்மையில் தேசிய கல்விக் கொள்கையின் வரைவை சமர்ப்பித்த குழுவின் தலைவர் யார்?

A) மாதவ் காட்கில்

B) எம் இராதாகிருஷ்ணன்

C) கே கஸ்தூரிரங்கன் ☑

D) எம் ஜி கே மேனன்



✓ ISRO முன்னாள் தலைவர் Dr. கே. கஸ்தூரிரங்கன் தலைமையிலான குழு, சமீபத்தில் புது தில்லியில் மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ரமேஷ் போக்ரியால் நிஷாங்கிடம் தேசிய கல்விக் கொள்கையின் வரைவை சமர்ப்பித்தது. பாடத்திட்டத்தில் இந்திய அறிவுசார் முறைமைகளை இணைப்பது, தேசிய கல்வி ஆணையம் அமைக்கப்பட்டு தனியார் பள்ளிகளால் தன்னிச்சையாக உயர்த்தப்படும் பள்ளிக் கட்டணங்களை கட்டுப்படுத்துவது ஆகியவற்றை இந்தக் கொள்கை வரைவு பரிந்துரைக்கிறது.

- முற்றுமுழுதாக ஆசிரியர் பயிற்சி பாடங்களை பல்கலை அல்லது கல்லூரிகளுக்கு மாற்ற வேண்டும் எனவும் இந்த வரைவு முன்மொழிந்துள்ளது. கணிதம், வானியல், தத்துவம், உளவியல், யோகா, கட்டுமானம், மருத்துவம், நிர்வாகம், அரசியல், சமூகம் உள்ளிட்ட துறைகளில் உள்ள இந்தியர்களின் பங்களிப்பு, இந்திய அறிவுசார் அமைப்புகளில் சேர்க்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. தற்போது நடப்பில் உள்ள தேசிய கல்விக்கொள்கையானது, கடந்த 1986ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு, பின்னர் 1992ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.

**3.** உலகக்கோப்பை போட்டியில் முதல் ஓவரை வீசிய முதல் சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனையை படைத்துள்ள வீரர் யார்?

A) டேல் ஸ்டெயின்

B) ஹஷிம் ஆம்லா

C) மான்டி பனேசர்

D) இம்ரான் தாஹிர் ☑



- ஓவல் ஆடுகளத்தில், இங்கிலாந்து – தென்னாப்பிரிக்கா இடையே நடந்த உலகக்கோப்பை தொடக்க ஆட்டத்தில், உலகக்கோப்பை போட்டியில் முதல் ஓவரை வீசிய முதல் சுழற்பந்து வீச்சாளர் என்ற சாதனையை தென்னாப்பிரிக்காவின் இம்ரான் தாஹிர் நிகழ்த்தினார்.

- உலகக்கோப்பை போட்டியில் விளையாடும் அதிக வயதுடைய (40 ஆண்டுகள் மற்றும் 64 நாட்கள்) தென்னாப்பிரிக்க வீரராகவும் தாஹிர் உள்ளார். கடந்த 1992ஆம் ஆண்டு நடந்த உலகக்கோப்பையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தின் இரண்டாவது ஓவரை நியூசிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் தீபக் படேல் வீசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**4.** சுகாதாரத் தரமதிப்பீடு இல்லாத இணையவழி உணவு விநியோகத்தை தடுக்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?

A) தமிழ்நாடு

B) பஞ்சாப் ☑

C) கேரளா

D) கர்நாடகம்



- உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய (FSSAI) வழிகாட்டுதலின்படி, ஆன்லைன் உணவு விநியோகிப்பாளர்கள் தங்களது உணவுப்பொருட்களுக்கு சுகாதாரத் தரமதிப்பீடு (Hygiene Rating) பெற்றிருப்பதை கட்டாயமாக்க பஞ்சாப் மாநில அரசு முடிவு செய்துள்ளது. நுகர்வோருக்கும், உணவுத் தயாரிப்பாளர்களுக்கும் இடையேயான நேரடித் தொடர்பை ஆன்லைன் உணவு வழங்கல் முறை துண்டித்துள்ளது.

✓ ஆகையால், உணவின் தரத்தையும், உணவு தயாரிக்கப்படுகிற நலச்சூழலையையும் உறுதிப்படுத்தும் பொறுப்பு, இடைநிலை உணவு விநியோக முறைக்கு மாற்றம் பெற்றுள்ளது. எனவே, இதை மனத்தில் வைத்து, அனைத்து ஆன்லைன் உணவு ஒழுங்கு – வழங்கல் நிறுவனங்களும் FBOஇன் பதிவு பெற்றுள்ளதையும், FSSAIஇன் அதிகாரப்பூர்வ நிறுவனங்களிடமிருந்து சுகாதாரத் தரமதிப்பீட்டைப் பெற்றுள்ளதையும் உறுதிசெய்ய அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

**5.** சமீபத்தில் மின் – சிகரெட்டுகளின் விளம்பரம் & விற்பனையை தடைசெய்த மாநில அரசு எது?

A) உத்தரப்பிரதேசம்

B) இராஜஸ்தான் ☑



C) மத்தியப்பிரதேசம்

D) கர்நாடகம்

✓ மே.31-உலக புகையிலை ஒழிப்பு தினத்தன்று, இராஜஸ்தான் மாநிலத்தில் மின்னணு சிகரெட்டின் (e-cigarette) உற்பத்தி, விநியோகம், விளம்பரம் மற்றும் விற்பனையை அம்மாநில முதலமைச்சர் அசோக் கெலாட் தடைசெய்து அறிவித்தார். இளைஞர்களிடையே போதைப்பழக்கத்தைத் தடுப்பதற்கு இது ஒரு முக்கியப் படியாகும். சுகாதாரத் துறை அதிகாரிகளின் கூற்றுப்படி, மின்னணு சிகரெட்டின் இணையவழி அல்லது நேரடி விற்பனை, சேமிப்பு, உற்பத்தி, விநியோகம் மற்றும் விளம்பரம் ஆகிய அனைத்தும் இராஜஸ்தான் மாநிலத்தில் தடைசெய்யப்படுகிறது.

**6.** இந்தியாவின் எம்மாநில அரசு, புகையிலை கட்டுப்பாட்டுக்காக நடப்பாண்டின் WHO விருதைப் பெற்றுள்ளது?

A) ஜார்க்கண்ட்

B) ஆந்திரப்பிரதேசம்



C) இராஜஸ்தான் ☑

D) ஹரியானா

✓ நடப்பாண்டின் உலக சுகாதார அமைப்பு விருதை இராஜஸ்தான் மாநில அரசின் மருத்துவம் மற்றும் சுகாதார நலத்துறை வென்றுள்ளது. புகையிலைக் கட்டுப்பாட்டில் அந்தத் துறையின் சாதனைகளை அங்கீகரிக்கும் விதமாக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு உலக புகையிலை தினத்தைக் குறிக்கும் வகையில் புது தில்லியில் நடத்தப்பட்ட ஒரு விழாவில், அத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், ரோகித் குமார் சிங் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

✓ புகையிலை ஒழிப்பு முயற்சிகளுக்காக இவ்விருதைப் பெறும் இந்திய அரசின் ஒரே மாநில சுகாதாரத் துறை இதுவாகும். இதுதவிர, தென்கிழக்காசிய பிராந்தியத்திலிருந்து இந்தப் பெருமைமிகு விருதுக்கு மேலும் 5 அமைப்புகளை WHO தேர்ந்தெடுத்துள்ளது. தென்கிழக்காசிய பிராந்தியத்தில் உள்ள 3 பிற

நிறுவனங்கள் தாய்லாந்து மற்றும் இந்தோனேசியாவில் இருந்து தேர்வு செய்யப்பட்டுள்ளன, அதே நேரத்தில் வல்லபாய் பட்டேல் நெஞ்சக நிறுவனமும் இவ்விருது பெற்றவர்கள் பட்டியலில் உள்ளது.

✓ ஒவ்வோர் ஆண்டும், உலக சுகாதார அமைப்பின் ஆறு பிராந்தியங்களைச் சேர்ந்த தனிநபர் அல்லது நிறுவனங்களை உலக சுகாதார அமைப்பு தெரிவு செய்து, புகையிலை கட்டுப்பாட்டில் அவர்களது சாதனைகளை அங்கீகரிக்கும் விதமாக விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது.

## 7. அதிநவீன போர் விமானத்தை தனியாக இயக்கிய முதல் பெண் போர் விமானி யார்?



A) அவனி சதுர்வேதி

B) பாவனா காந்த்

C) மோகனா சிங் ☑

D) பிரியா சிங்

✓ 'Hawk Jet' என்னும் அதிநவீன போர் விமானத்தை தனியே இயக்கிய, இந்திய வான் படையின் முதல் பெண் போர் விமானி என்ற பெருமையை Lt. மோகனா சிங் பெற்றுள்ளார். மேற்கு வங்கத்தில் உள்ள கலைகுந்தா வான் படை தளத்தில் அவர் இச்சாதனையைப் புரிந்தார். விமானத்திலிருந்து விமானம் மற்றும் வானிலிருந்து நிலத்திற்கு குண்டு வீசி தாக்கும் பயிற்சிகளையும் அவர் பெற்றுள்ளார். இந்தப் பயிற்சியின்போது, விமானத்திலிருந்து குண்டுகளை வீசுவது, ஏவுகணைகளை குறிவைத்து சுடுவது உள்ளிட்ட இலக்குகளை அவர் வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

✓ சுமார் 500 மணிநேரம், எந்தவித தடங்கலும் இல்லாமல் விமானத்தை இயக்கி பயிற்சிபெற்றுள்ளார். அதில் சுமார் 380 மணிநேரங்களுக்கு ஹாக் எம்கே 132 ஜெட் விமானத்தை இயக்கியுள்ளார். விமானப் படையில் பெண்களை விமானிகளாக பணியமர்த்த பாதுகாப்பு துறை அமைச்சகம் முடிவெடுத்ததை அடுத்து கடந்த 2016ஆம் ஆண்டு மோகனா சிங், அவனி சதுர்வேதி, பாவனா காந்த் முதலிய மூன்று பெண்களும் விமானப்படையில் பணியமர்த்தப்பட்டனர். முன்னதாக பாவனா காந்த், 'MiG-21 பைசன்' இரக போர் விமானத்தை, அண்மையில் இயக்கி சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

## 8. உலகின் தென்கோடி நகரமாக மாறியுள்ள போர்ட் வில்லியம்ஸ் (Puerto Williams), பின்வரும் எந்த நாட்டில் அமைந்துள்ளது?



A) ஈக்வேடார்

B) பெரு

C) அர்ஜென்டினா

D) சிலி ☑

✓ போர்ட் வில்லியம்ஸ் என்பது சிலியின் நவரினோ தீவில் உள்ள பிரதான குடியேற்றம், துறைமுகம் மற்றும் கடற்படைத் தளமாகும். அண்மையில், சிலி நாட்டு அதிகாரிகள் போர்ட் வில்லியம்ஸ் நகரை குக்கிராமம் என்னும் நிலையிலிருந்து நகரம் என்னும் நிலைக்கு உயர்த்தியபின், அது உலகின் தென்

கோடி நகரமாக மாறியது. அர்ஜென்டின மாகாணத்தின் தியேரா தேல் பியூகோவின் தலைநகரான உஷுவியா, இந்த அறிவிப்புக்கு முன்பு வரை உலகின் தென்கோடி நகரமாக இருந்துவந்தது.

**9.** இந்திய நாடாளுமன்ற வரலாற்றில், இளவயதுடைய நாடாளுமன்ற உறுப்பினர் யார்?



A) ஜோதிமணி S

B) சந்திராணி முர்மு ☑

C) சுமலதா அம்பரீஷ்

D) இரம்யா ஹரிதாஸ்

- ✓ பிஜு ஜனதா தளத்தின் உறுப்பினராக 2019ஆம் ஆண்டு இந்திய பொதுத்தேர்தலில் ஒடிசா மாநிலத்தின் கியோஞ்சர் தொகுதியிலிருந்து 17ஆவது மக்களவைக்குத் தெரிவான பின்னர், இந்திய நாடாளுமன்ற வரலாற்றில், இளவயதுடைய நாடாளுமன்ற உறுப்பினராக சந்திராணி முர்மு (25) மாறினார். இவரை எதிர்த்து போட்டியிட்ட 2 முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பா.ஜ.கவின் அனந்த நாயக்கை 66,203 வாக்குகள் வித்தியாசத்தில் சந்திராணி முர்மு வென்றார்.
- ✓ இவர், புவனேசுவரத்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் B.Tech பட்டப்படிப்பை முடித்துள்ளார். இவருக்கு முன்னதாக கடந்த 16ஆவது மக்களவைத் தேர்தலில் ஹரியானாவின் ஹிசார் தொகுதியில் இருந்து வெற்றி பெற்ற துஷ்யந்த் சவுதாலாதான் மிகவும் இளவயது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையை பெற்றிருந்தார். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவான போது அவரது வயது 26.

**10.** 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் 10ஆவது தேசிய அறிவியல் திரைப்பட விழாவை (NSFFI) நடத்தவுள்ள நகரம் எது?

A) அகர்தலா ☑

B) புவனேசுவர்

C) லக்னோ

D) மொகாலி

- ✓ இந்தியாவின் 10ஆவது தேசிய அறிவியல் திரைப்பட விழாவானது 2020ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் அகர்தாலாவில் நடைபெறவுள்ளது. திரைப்படங்கள் மூலம் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த விழாவின் நோக்கமாகும். வடகிழக்கு நகரம் ஒன்றில் இவ்விழா நடைபெறுவது இது இரண்டாவது முறையாகும்.
- ✓ அறிவியல், தொழில்நுட்பம், கண்டுபிடிப்பு, ஆற்றல், சுற்றுச்சூழல், வேளாண்மை மற்றும் பாரம்பரிய அறிவு ஆகியவற்றை சிறப்பிக்கும் நோக்கத்துடன் இந்தத் திரைப்படத் திருவிழா நடைபெறுகிறது. எளிய விளக்கங்களின் மூலம் எளிய மக்களிடையே அறிவியல் கருத்துக்களை கொண்டு சேர்க்கும் ஓர் எளிய வழியாக இவ்விழா உள்ளது.

- ✓ UNICEF, UNESCO மற்றும் வெவ்வேறு நாடுகளின் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்ட படங்கள் இவ் விழாவில் திரையிடப்படும். திரிபுரா மற்றும் பிற மாநிலங்களின் திரைப்படங்களும் இதில் அடங்கும்.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தின் சென்னை விமான நிலைய இயக்குநராக S ஸ்ரீகுமார் பொறுப்பேற்றுள்ளார். இதுவரை இப்பதவியில் இருந்த G. சந்திர மௌலி மும்பையில் மண்டல செயல் இயக்குநராக (மேற்கு மண்டலம்) மாற்றப்பட்டதை அடுத்து ஸ்ரீகுமார் இப்பொறுப்பை ஏற்றுள்ளார்.
- ✓ கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சாலை, பாலங்களை சீரமைக்க தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மூலம் தமிழ்நாடு அரசுக்கு ரூ.159 கோடி நிதியுதவி வழங்கப்படுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ளவர் யார்?



A) மால்கம் டர்ன்பல்

B) கென் வைட்

C) பீட்டர் காஸ்குரோவ்

D) ஸ்காட் மோரிசன் (Scott Morrison) ☑

- ✓ 2019ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பதவியைத் தக்கவைத்துக்கொண்ட பின்னர், ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமராக ஸ்காட் மோரிசன் மீண்டும் பதவியேற்றார். ஆஸ்திரேலிய தலைநகர் கான்பராவில் நடந்த பதவியேற்பு நிகழ்ச்சியில், துணைப் பிரதமர் மைக்கேல் மெக்கார்மக் மற்றும் பிரதமர் மோரிசன் ஆகியோருக்கு, பிரித்தானிய பேரரசி எலிசபத்தின் ஆஸ்திரேலியாவுக்கான பிரதிநிதி பீட்டர் காஸ்குரோவ் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

- ✓ கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்ட ஓர் உட்கட்சி வாக்கெடுப்பில் ஆஸ்திரேலியாவின் 30ஆவது பிரதமராக மோரிசன் தெரிவு செய்யப்பட்டார். ஆஸ்திரேலியாவின் 46ஆவது நாடாளுமன்றம் ஜூலை மாதம் முதல் வாரத்தில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.** நடப்பாண்டின் $100,000 டாலர்கள் பரிசுத்தொகையுடன் கூடிய 'Nine Dots' பரிசுக்கான வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ள இந்திய எழுத்தாளர் யார்?



A) கே ஜோசி

B) மீரா குமாரி

C) ஆன்னி சைதி (Annie Zaidi) ☑

D) யாவர் அகமத்

- ✓ மும்பையைச்சேர்ந்த பகுதி நேர எழுத்தாளரான ஆன்னி சைதிக்கு, 'Bread, Cement, Cactus' என்ற தலைப்பில் அவரெழுதிய கட்டுரைக்காக $100,000 டாலர்கள் பரிசுத்தொகையுடன் கூடிய 'Nine Dots' நூற்பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் அவருடைய சமகால வாழ்க்கை அனுபவத்தில் வேர் ஊன்றி, வீடு என்ற கருத்தோட்டத்தை அலசி ஆராய்ந்து, நினைவலைகள், செய்தி விமர்சனங்கள் என்ற இரண்டின் சங்கமமாக இந்தக் கட்டுரையை ஆன்னி சைதி எழுதியுள்ளார்.

- ✓ பரிசு வென்றவர் இக்கட்டுரையை பின்னர் முழு நூலாக விரித்து எழுதவேண்டும். அதை கேம்பிரிட்ஜ் பல்கலையின் பதிப்பகம் நூலாக வெளியிடும். மேலும் கேம்பிரிட்ஜ் பல்கலையில் உள்ள கலைகள், சமூக அறிவியல்கள் மற்றும் மானுடவியல் ஆய்வுமையத்தில் குறிப்பிட்ட காலம் தங்கியிருப்பதற்கான வாயப்பும் அவருக்கு வழங்கப்படும்.

**3.** அண்மையில் எந்தத் தேதியில் நடப்பாண்டு சர்வதேச எவரெஸ்ட் தினம் கடைபிடிக்கப்பட்டது?



**A)** மே 27

**B)** மே 29 ☑

**C)** மே 30

**D)** மே 28

- ✓ 1953ஆம் ஆண்டு மே.29 அன்று நியூசிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் ஹிலாரியும், நேபாளத்தைச் சேர்ந்த டென்சிங் நார்கே ஷெர்பாவும் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை முதன்முறையாக எட்டியதன் நினைவாக ஒவ்வோர் ஆண்டும் மே.29 அன்று சர்வதேச எவரெஸ்ட் தினம் கடைபிடிக்கப்படுகின்றது.
- ✓ காத்மண்டுவிலும், எவரெஸ்ட் பகுதியிலும் நினைவு நிகழ்வுகள், பேரணிகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் ஆகியவை இந்நாளின்போது நடத்தப்படுகின்றன. பிரபல மலையேற்ற வீரரான ஹிலாரி காலமான பின்பு, 2008 முதல், இந்நாளை சர்வதேச எவரெஸ்ட் தினமாக கடைபிடிக்க நேபாளம் முடிவு செய்தது.

**4.** நடப்பாண்டு சர்வதேச ஐ.நா அமைதி காப்போர் தினத்தின் கருப்பொருள் என்ன?




**A)** Protecting Civilians, Protecting Peace ☑

**B)** Courage for Peace

**C)** Law, Order, Peace

**D)** Peacekeeping Is a Global Partnership

- ✓ சீருடை & குடிமக்கள் பணியாளர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்புக்கு அஞ்சலி செலுத்துவதோடு, அமைதிகாக்கும் சேவைகளை வழங்கும்போது தங்களது இன்னுயிரை இழந்த 3,800க்கும் மேற்பட்ட அமைதி காப்போரைக் கௌரவிக்கவும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் மே.29 அன்று சர்வதேச ஐ.நா அமைதி காப்போர் தினம் (International Day of United Nations Peacekeepers) அனுசரிக்கப்படுகிறது.
- ✓ "குடிமக்களை பாதுகாத்தல், அமைதியைப் பாதுகாத்தல் – Protecting Civilians, Protecting Peace" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். 1948ஆம் ஆண்டு இதே நாளில், "ஐ.நா இடைக்கால போர் நிறுத்த உடன்பாடு மேற்பார்வை அமைப்பு (UNTSO)" என்னும் பெயரில் முதல் ஐ.நா அமைதிகாப்பு நடவடிக்கைகள் பாலஸ்தீனத்தில் தொடங்கின. அப்போதிலிருந்து 10 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்கள் & பெண்கள் 72 ஐ.நா அமைதிகாப்பு நடவடிக்கைகளில் பணியாற்றியுள்ளனர்.
- ✓ ஐ.நா அமைதிகாப்பு நடவடிக்கைகளுக்கான 4ஆவது மிகப்பெரிய படை பங்களிப்பாளராக இந்தியா உள்ளது. ஐ.நா அமைதிகாப்பானது, போரிலிருந்து அமைதிக்குத் திரும்ப நாடுகளுக்கு உதவுகிறது. தற்சமயம், உலகம் முழுவதும் நடைபெற்று வரும் பல்வேறு அமைதிகாப்பு நடவடிக்கைகளுக்கு சுமார் 6400க்கும் மேற்பட்ட அமைதி காப்பாளர்களை இந்தியா பங்களித்துள்ளது.

**5.** அண்மையில் காலமான மூத்த விடுதலைப் போராட்ட வீரர் கியான் சந்த், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?

A) பீகார்

B) உத்தரப்பிரதேசம்

C) ஹிமாச்சலப்பிரதேசம் ☑

D) பஞ்சாப்



✓ மூத்த விடுதலைப் போராட்ட வீரரான கியான் சந்த் (93), ஹிமாச்சலப் பிரதேச மாநிலத்தின் சம்பா மாவட்டத்தில் உள்ள தனது பூர்வீக கிராமத்தில் மே.27 அன்று காலமானார். 1926ஆம் ஆண்டு அக்.26 அன்று பிறந்த இவர், நேதாஜி தலைமையிலான ஆசாத் ஹிந்தின் உறுப்பினராக இருந்தார்.

**6.** WhatsApp பரிவர்தனை தளத்தை அறிமுகப்படுத்தியுள்ள முதல் இந்திய நிதி நிறுவனமாக மாறியுள்ள சொத்து மேலாண்மை நிறுவனம் எது?

A) எஸ்பிஐ பரஸ்பர நிதி

B) மோதிலால் ஓஸ்வால் சொத்து மேலாண்மை நிறுவனம் ☑

C) ரிலையன்ஸ் பரஸ்பர நிதி

D) ஆதித்யா பிர்லா சன் லைஃப் பரஸ்பர நிதி

MOTILAL OSWAL
Private Equity

✓ மோதிலால் ஓஸ்வால் சொத்து மேலாண்மை நிறுவனமானது புதிய மற்றும் ஏற்கனவே இருக்கும் முதலீட்டாளர்களுக்கு அதன் WhatsApp பரிவர்த்தனை தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. பிரபல பன்னியக்குதள (Cross – Platform) தகவலனுப்பும் செயலி மூலம் பரஸ்பர நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் இந்தியாவின் முதல் நிதி நிறுவனமாக இந்நிறுவனம் மாறியுள்ளது.

✓ முதலீட்டாளர்கள் இதன் மூலம், மோதிலால் ஓஸ்வால் AM நிறுவனத்தின் எந்தவொரு திட்டத்திலும் முதலீடு செய்ய WhatsAppஐப் பயன்படுத்த முடியும். இந்த அம்சம், WhatsApp Payஇன் ஒரு பகுதி அன்று, கட்டணஞ்செலுத்து தளமாக WhatsAppஐப் பயன்படுத்துவதிலிருந்து இது வேறுபடுகிறது.

**7.** பிரெஞ்சு ஓபன் போட்டியில் வெற்றிபெற்ற வயதான மனிதரான ஐவோ கார்லோவிக், எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?

A) குரோஷியா ☑

B) ஸ்பெயின்

C) பிரான்ஸ்

D) ஜெர்மனி



- ரோலாண்ட் கேரோஸில் நடந்த நடப்பாண்டு பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில், ஸ்பெயினின் பெலிசியானோ லோபசை (37) வீழ்த்திய பின்னர், 1973ஆம் ஆண்டுக்குப் பின் முதல்முறையாக பிரெஞ்சு ஓபன் போட்டியில் வெற்றிபெற்ற வயதான மனிதராக குரோஷியாவின் ஐவோ கார்லோவிக் (40) மாறினார்.

- 1978ஆம் ஆண்டிலிருந்து கிராண்ட்ஸ்லாம் போட்டியில் வெல்லும் வயதானவரும் கார்லோவிக்தான். பெண்களில், இச்சாதனையை எலிசபெத் ரையான் தக்கவைத்துள்ளார். 1934ஆம் ஆண்டின் பெண்கள் இரட்டையர் பட்டத்தை சிமோனே மாத்யூவுடன் இணைந்து அவர் வெல்லும்போது அவரது வயது 42.

**8.** இந்தியாவின் முதல் 'பிளாக்செயின் மாவட்டத்தை' அமைக்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?




**A)** கர்நாடகம்

**B)** ஆந்திரப்பிரதேசம்

**C)** தெலுங்கானா ☑

**D)** ஜார்க்கண்ட்

- அனைத்து துளிர்நிலை (Start-ups) & நிறுவனங்களுக்கும் ஒரு சூழலமைப்பை உருவாக்குவதற்காக ஹைதராபாத்தில் இந்தியாவின் முதல் 'பிளாக்செயின் மாவட்டத்தை' அமைக்க தெலுங்கானா மாநில அரசு முடிவு செய்துள்ளது. 'Blockchain' தொழினுட்பம் எல்லா களங்களையும் உள்ளடக்கியிருந்தாலும், வங்கியியல், நிதியியல் சேவைகள் மற்றும் காப்பீடு; மருந்து மற்றும் சுகாதாரம்; தளவாடங்கள் மற்றும் விநியோகச் சங்கிலி; மற்றும் அரசாங்க துறைகள் முதலியவற்றில் மிகுந்த கவனம் செலுத்தும்.

- இணை – பணிபுரி வெளி (Co-Working Space), ஒரு பன்னாட்டுத் தொடர்பு அலுவலகம், பிளாக்செயின் களத்தில் பணிபுரியும் தொடக்க நிலை துளிர் நிறுவனங்களுக்கு T-Hub போன்றதொரு வழிகாட்டி அடைவு (Incubation) மையம் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்கு ஆதரவான ஓர் ஆராய்ச்சி & மேம்பாட்டு மையம் ஆகியவற்றை ஒரு மாவட்டம் கொண்டிருக்கும்.

**9.** மருத்துவ குணம் நிறைந்த தாவரங்கள் பயிரிடலை ஊக்குவிப்பதற்காக 'நறுமணத் திட்டம் – Aroma Mission' என்ற ஒன்றை தொடங்கியுள்ள மாநில அரசு எது?



**A)** திரிபுரா

**B)** நாகலாந்து

**C)** மிசோரம்

**D)** மேகாலயா ☑

- மேகாலயா முதலமைச்சர் கான்ராட் K சங்மா, ரை – போய் மாவட்டத்தின் பைர்வாவில் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'Aroma Mission' என்ற ஒன்றை தொடங்கினார். விவசாயிகளின் வாழ்வாதார நிலையை

வலுப்படுத்துவதும், மாநிலத்தில் வேலைவாய்ப்பை உருவாக்குவதும் இதன் இலக்காகும். இந்தத் திட்டமானது மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்கள் பயிரிடலை அதிகரிக்கும்.

✓ இந்தத் திட்டத்தின் ஒருபகுதியாக, மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்களின் கூட்டுப் பணிக்காக மத்திய மருத்துவ & நறுமணப்பயிர்கள் மையம் (CIMAP) மற்றும் மேகாலய வடிநில மேம்பாட்டு ஆணையம் ஆகியவற்றிற்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. CIMAP என்பது அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மையத்தின் (CSIR) ஒரு முன்னணி ஆராய்ச்சி ஆய்வகம் ஆகும். ஜூன் 5 – உலக சுற்றுச்சூழல் நாளன்று காடுகளின் பரப்பை அதிகரிக்கவும், பாதுகாக்கவுமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஒரு மில்லியன் மரங்கள் நடுவதற்கான அரசின் திட்டத்தை மேகாலாய முதல்வர் அறிவித்துள்ளார்.

**10.** பின்வரும் நாடுகளில் BIMSTECஇன் உறுப்பு நாடு/கள் எது/எவை?

A) இந்தோனேசியா

B) பாகிஸ்தான்

C) தாய்லாந்து ☑

D) மொரிசியஸ்



✓ மே.30 அன்று நடைபெற்ற பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில், 'BIMSTEC' (வங்காள விரிகுடா நாடுகள் ஒத்துழைப்பு அமைப்பு) அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதுதவிர, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தற்போதைய தலைவரான கிர்கிஸ்தான் அதிபர் சூரோன்பே ஜீன்பிக்கோவுக்கும், நடப்பாண்டு வெளிநாடு வாழ் இந்தியர்கள் நாளன்று சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மொரிசியஸ் பிரதமர் பிரவிந்த் ஜகந்நாத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

✓ அரசாங்கத்தின் "சுற்றுப்புறத்தார்க்கு முன்னுரிமை – Neighbourhood First" என்ற கொள்கையின் அடிப்படையில் இவ்வழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. இந்தியா உட்பட வங்கதேசம், மியான்மர், இலங்கை, தாய்லாந்து, நேபாளம் மற்றும் பூடான் முதலிய நாடுகள் BIMSTEC (Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation) உறுப்பு நாடுகளாகும்.

✓ புது தில்லியில் உள்ள குடியரசுத்தலைவர் மாளிகை முற்றத்தில் நடந்த பதவியேற்பு விழாவில், நரேந்திர மோடிக்கு பிரதமராக, குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த், பதவிப்பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார். பிரதமரைத் தொடர்ந்து, 24 அமைச்சரவை அமைச்சர்களும், 33 இணையமைச்சர்களும் பதவியேற்றனர்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.** புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?



A) ராஜீவ் மாத்தூர்

B) தினேஷ்வர் சர்மா

C) ராஜீவ் ஜெயின்

D) அஜித் தோவல் ☑

- ✓ 1968ஆம் ஆண்டின் IPS அதிகாரிகள் அணியைச் சேர்ந்தவரும், மத்திய உளவுத்துறையின் முன்னாள் தலைவருமான அஜித் தோவல், 5 ஆண்டுகாலத்திற்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகராக மறு நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு அமைச்சரவை (Cabinet) அமைச்சருக்கு இணையான அதிகாரமும் அளிக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கு (National Security Advisor) அமைச்சரவை அமைச்சர் தகுதி அளிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

- ✓ எல்லை தாண்டி பாகிஸ்தானுக்குள் நடத்தப்பட்ட துல்லியத் தாக்குதல் (Surgical Strike); புல்வாமாவில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தப்பட்ட பிறகு, பாகிஸ்தானின் பாலகோட் பகுதி மீது நடத்தப்பட்ட வான் படை தாக்குதல்; இந்தியா, சீனா, மியான்மர் ஆகிய மூன்று நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் டோக்லாம் பகுதியில், இந்திய – சீனப் படைகளுக்கு இடையே 73 நாள் நீடித்த பதற்ற நிலைக்கு தீர்வு கண்டது ஆகியவற்றில் இவர் முக்கியப் பங்காற்றியுள்ளார்.

- ✓ 1999இல் இந்தியன் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம், ஆப்கானிஸ்தானின் காந்தகார் நகரத்துக்கு கடத்தப்பட்டபோது, கடத்தல்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதிலும் அஜித் தோவல் முக்கியப் பங்காற்றியுள்ளார். காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்கள், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் 33 ஆண்டுகள் உளவுத்துறை அதிகாரியாக இவர் பணிபுரிந்துள்ளார்.

**2.** நடப்பாண்டு சாம்பியன்ஸ் லீக் கோப்பையை வென்றுள்ள கால்பந்து அணி எது?

A) FC பார்சிலோனா

B) லிவர்பூல் FC ☑

C) டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் F.C

D) ரியல் மாட்ரிட்

- ✓ ஜூன்.1 அன்று மாட்ரிடில் நடந்த போட்டியில் லிவர்பூல் FC அணி, 6ஆவது முறையாக சாம்பியன்ஸ் லீக் கோப்பையை வென்றது. இறுதியாட்டத்தில் இங்கிலாந்து பிரிமீயர் லீக் அணிகளான லிவர்பூல் – டாட்டன்ஹாம் மோதின. ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணிக்கு கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில் நட்சத்திர வீரர் முகமது சாலா அணிக்காக முதல் கோலை அடித்தார்.

✓ பெல்ஜியத்தைச் சேர்ந்த லிவர்பூல் வீரர் டிவோக் ஓரிகி அணிக்காக 2ஆவது கோலை அடித்தார். கடைசி வரை போராடிய டாட்டன்ஹாம் அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. முடிவில் 2-0 என்ற கணக்கில் டாட்டன்ஹாம் அணியை வீழ்த்தி லிவர்பூல் அணி சாம்பியன் ஆனது. லிவர்பூல் அணியின் பயிற்சியாளராக ஜெர்ஜன் கிளாப் பொறுப்பேற்ற 4 ஆண்டுகளுக்குப்பின், லிவர்பூல் FC இந்தப்பட்டத்தை வென்றுள்ளது.

**3.** அண்மையில் காலமான மூத்த நடிகை ரூமா குகா தாகுர்தா, எந்தப் பிராந்திய திரையுலகைச் சேர்ந்தவர்?



**A)** கன்னடம்

**B)** பெங்காலி ☑

**C)** தெலுங்கு

**D)** ஒரியா

✓ வங்காள மொழி திரையுலகின் மூத்த நடிகையும், பாடகியுமான ரூமா குகா தாகுர்தா (84), மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் காலமானார். சத்யஜித்ரே இயக்கிய கனசத்ரு (1989) மற்றும் அபிஜான் (1962) முதலிய படங்களில் அவரது பாத்திரங்களுக்காக அவர் அறியப்படுகிறார். 1958ஆம் ஆண்டில் கல்கத்தா இளையோர் இசைக் குழுவொன்றை ரூமா நிறுவினார்.

**4.** நடப்பாண்டு உலக பால் தினத்துக்கான கருப்பொருள் என்ன?



**A)** Drink Move Be Strong

**B)** Drink Milk : Today & Everyday ☑

**C)** Drink Milk, Be Strong

**D)** Raise a Glass

✓ உலக பால் தினம், ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.1ஆம் தேதியன்று கடைபிடிக்கப்படுகிறது. பாலின் மீது கவனம் செலுத்தவதற்கும், பால் மற்றும் பால் தொழிற்துறையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை விளம்பரப்படுத்துவதற்கும் இந்த நாள் வாய்ப்பளிக்கிறது. 2001ஆம் ஆண்டில் ஐ.நா அவையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது ஜூன்.1ஆம் தேதியை உலக பால் தினமாக தெரிவு செய்தது.

✓ நிலைத்தன்மை, பொருளாதார வளர்ச்சி, வாழ்வாதாரங்கள் மற்றும் ஊட்டச்சத்து முதலியவற்றுக்கு பால் தொழிற்துறையின் இன்றியமையாத பங்களிப்பை இந்நாள் கொண்டாடுகிறது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், “பால் குடியுங்கள் : இன்றும் & தினமும்”.

**5.** ஐ.நா பெண்கள் இணை நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய – வம்சாவளி யார்?

A) அனிதா பாட்டியா ☑

B) பிரமிளா ஜெயின்

C) வர்ஷா கண்ணா

D) கிரண் சர்மா



✓ வள மேலாண்மை, நிலைத்தன்மை மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றுக்கான பாலின சமத்துவம், பெண்களுக்கு அதிகாரமளித்தலுக்கான ஐ.நா பிரிவின் இணை நிர்வாக இயக்குநராக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனிதா பாட்டியாவை ஐ.நா பொதுச்செயலர் ஆண்டனியோ குட்டரஸ் நியமித்துள்ளார். இந்திய இராணுவ அதிகாரி Lt.Gen சைலேஷ் தினைகர், தெற்கு சூடானில் உள்ள ஐ.நா திட்டத்தின் புதிய படைத்தளபதியாக நியமிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குள்ளாக இந்த நியமனம் வந்துள்ளது.

**6.** விலங்குகளை சட்டமுறை நபர்களாக அண்மையில் அறிவித்த உயர்நீதிமன்றம் எது?

A) தில்லி உயர்நீதிமன்றம்

B) மெட்ராஸ் உயர்நீதிமன்றம்

C) பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் ☑

D) பாம்பே உயர்நீதிமன்றம்



✓ ஹரியானாவில் வாழும் மனிதர்களைப் போன்று அங்கு வாழும் அனைத்து விலங்குகளும் சட்டப்பூர்வ உரிமைகள் பெற்ற சட்டமுறை நபர்கள் என சமீபத்தில் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. விலங்குகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக உத்தரகாண்ட் உயர்நீதிமன்றம் இதுபோன்ற தீர்ப்பை வழங்கி கிட்டத்தட்ட ஓராண்டுக்குப் பிறகு இந்தத் தீர்ப்பு வந்துள்ளது.

✓ உத்தரகாண்டிலிருந்து சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா நீதிமன்றத்திற்கு 2018ஆம் ஆண்டில் பணிமாறுதல் பெற்ற நீதிபதி ராஜீவ் சர்மாவால், இவ்விரு தீர்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளது. உ.பி.இலிருந்து ஹரியானாவுக்கு கொடூரமான முறையில் கட்டப்பட்டு கொண்டு செல்லப்பட்ட 29 பசுக்கள் குறித்து பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தில் தகவல் தெரிவித்ததை தொடர்ந்து தொடுக்கப்பட்ட வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.விலங்குகளைக் கொண்டு இயக்கப்படும் வண்டிகளுக்கு ‘வழிக்கான உரிமை’ உள்ளது எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**7.** அண்மையச் செய்திகளில் இடம்பெற்றிருக்கும் NGTS-4b, பின்வரும் எந்தக் கோளுடன் தொடர்புடையது?

A) நெப்டியூன் ☑

B) யுரேனஸ்

C) வியாழன்

D) செவ்வாய்



- ✓ ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள வார்விக் பல்கலையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், நெப்டியூனிய பாலைவனத்தில், சொந்த வளிமண்டலத்தை உடைய NGTS-4b என்று பெயரிடப்பட்டுள்ள புறக்கோள் ஒன்றினை கண்டறிந்துள்ளனர். நெப்டியூன் அளவுடைய கோள்கள் தென்படாத, நட்சத்திரங்களுக்கு அருகே அமைந்துள்ள ஒரு மண்டலந்தான் நெப்டியூனிய பாலைவனம்.
- ✓ நட்சத்திரத்திலிருந்து வலிமையான கதிரியக்கத்தை இம்மண்டலம் பெறுகிறது. அதாவது, வாயுக்கள் ஆவியாகி விடுவதால் கோள்களால் தங்களது வளி மண்டலத்தை தக்கவைத்துக் கொள்ள இயலாது, அதனால் அவை வெறும் பாறைக்கோளமாகவே இருக்கும். இருந்தும், NGTS-4b இன்னமும் அதன் வளிமண்டலத்தைக் கொண்டுள்ளது. நெப்டியூனைவிட சிறியதாகவும், பூமியை விட மும்மடங்கு அளவில் பெரியதாகவும் உள்ள இந்த NGTS-4b புறக்கோளை 'தவிர்க்கப்பட்ட கோள் - The Forbidden Planet' என அழைக்கின்றனர்.
- ✓ புவியின் நிறை போன்று 20 மடங்கு நிறையும், நெப்டியூனைவிட 20% குறைவான ஆரமும், 1000° C வெப்பநிலையும் இந்தப் புறக்கோள் கொண்டுள்ளது. இதன் வகையில், நெப்டியூனிய பாலைவனத்தில் கண்டறியப்பட்ட முதல் புறக்கோள் இதுவாகும். NGTS தொலைநோக்கிகள், சிலி நாட்டின் அடகாமா பாலைவனத்தின் மையத்தில் அமைந்துள்ள ஐரோப்பிய தெற்கத்திய கண்காணிப்பு மையத்தின் பரானல் கண்காணிப்பு மையத்தில் அமைந்துள்ளன.

**8.** யோகாவை விளம்பரப்படுத்துவதற்காக கோவாவின் புதிய விளம்பரத் தூதராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

A) பாலகிருஷ்ணா

B) நம்ரதா மேனன் ☑

C) சக்கி வாசுதேவ்

D) இராம்தேவ்



- ✓ பனாஜியைச் சேர்ந்த யோகா பயிற்றுவிப்பாளரும், உடற்பயிற்சி வல்லுநருமான நம்ரதா மேனன், உடல் மற்றும் மனப் பயிற்சிக்கான பண்டைய யோகா முறையை விளம்பரப்படுத்துவதற்கான கோவாவின் புதிய விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். யோகாவின் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், நலமிகு வாழ்க்கை முறையை மக்களிடையே ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.

**9.** மெக்ஸிகோவின் மிகவுயரிய குடிமக்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள இந்திய குடியரசுத்தலைவர் யார்?



**A)** பிரணாப் முகர்ஜி

**B)** A P J அப்துல் கலாம்

**C) பிரதீபா பாட்டில் ☑**

**D)** இராம்நாத் கோவிந்த்

✓ ஜூன்.1 அன்று முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டில் அவர்களுக்கு, புனேவிலுள்ள MCCIA பவனில், "Orden Mexicana del Aguila Azteca" (Order of the Aztec Eagle – அஸ்டெக் கழுகு விருது) வழங்கப்பட்டது. இது அயல்நாட்டினருக்கு வழங்கப்படும் மெக்ஸிகோவின் மிகவுயரிய குடிமக்கள் விருதாகும். மெக்ஸிகோவுக்கும் பிற நாட்டுக்கும் இடையே இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் சிறந்த பங்களிப்பு புரிவோரையும், மெக்ஸிக நாட்டுக்கும், மனிதநேயத்திற்கும் சிறந்த சேவைகளை அளிப்போரையும் அங்கீகரிக்கும் விதமாக இவ்விருது வழங்கப்படுகிறது.

✓ இந்தியாவின் முதல் பெண் குடியரசுத்தலைவரான பாட்டில் (2007 – 2012) இந்த விருதைப் பெறும் இரண்டாவது இந்திய குடியரசுத்தலைவராவார். முன்னதாக, மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் S இராதாகிருஷ்ணனுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

**10.** புதிதாக உருவாக்கப்பட்ட ஜல் சக்தி அமைச்சகத்தின் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளவர் யார்?



**A)** கிரிராஜ் சிங்

**B) கஜேந்திர சிங் ஷெகாவத் ☑**

**C)** மகேந்திர நாத் பாண்டே

**D)** பிரல்ஹாத் ஜோஷி

✓ மத்திய நீர்வளம், ஆறுகள் மேம்பாடு, கங்கையை புனரமைத்தல் அமைச்சகம், மத்திய குடிநீர் மற்றும் துப்புரவுப் பணிகள் அமைச்சகம் ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு 'ஜல் சக்தி' என்ற பெயரில் புதிய அமைச்சகத்தை இந்திய அரசு உருவாக்கியுள்ளது. இந்த அமைச்சகத்துக்கான பொறுப்பு கஜேந்திர சிங் ஷெகாவத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

✓ தூய்மையான குடிநீரை வழங்குவது மற்றும் இந்தியாவின் நீர்ப் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடி தீர்வு காண்பது ஆகியவை இதன் முக்கியப் பணிகளாக இருக்கும். தூய்மையான குடிநீர் வழங்கல், சர்வதேச மற்றும் மாநிலங்களுக்கிடையிலான ஆற்றுநீர் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல், கங்கை ஆற்று மற்றும் அதன் கிளையாறுகள் மற்றும் துணைக் கிளையாறுகளை தூய்மையாக்கும் பணித் திட்டமான நமாமி கங்கை ஆகியவை சார்ந்த விஷயங்களில் இந்த அமைச்சகம் கவனம் செலுத்தும்.

- ✓ இரத்தன் லால் கட்டாரியா, புதிதாக உருவாக்கப்பட்ட இந்த அமைச்சகத்தின் இணையமைச்சராக பதவி வகிப்பார். நடந்து முடிந்த 2019 மக்களவைத் தேர்தலில், ஜோத்பூர் தொகுதியில், இராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட்டின் மகன் வைபவ் கெலாட்டை, 2.74 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் கஜேந்திர சிங் ஷெகாவத் தோற்கடித்தார்.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பல்நோக்கு மருத்துவ மையம் திறக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஓர் அரசு மருத்துவமனையில் இதுபோன்ற மருத்துவ மையம் திறக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.
- ✓ சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையின் முடநீக்கியல் & எலும்புமுறிவு அறுவைசிகிச்சைத் துறை சார்பில், எலும்பு தொடர்பான நோயாளிகளின் ஐயங்களைத் தீர்க்க, 'STAN ORTHO' என்னும் புதிய அலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே அரசு மருத்துவமனை ஒன்றில், துறைரீதியான அலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ✓ தமிழ்நாட்டில் சுகாதார வசதியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் தமிழ்நாடு சுகாதார முறைமை சீரமைப்பு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்காக உலக வங்கியிடம் $287 மில்லியன் டாலர் நிதியுதவி வேண்டி மத்திய அரசுடன் இணைந்து மாநில அரசு ஒப்பந்தமிட்டுள்ளது.
- ✓ சென்னையிலிருந்து வாரணாசிக்கு வரும் 6ஆம் தேதி முதல் நேரடி விமான சேவை தொடங்குவதாக ஏர் இந்தியா விமான நிறுவனம் அறிவித்துள்ளது.
- ✓ இந்தியன் ஆயில் நிறுவனத்தின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில செயல் இயக்குநராக இருந்த R சித்தார்த்தன் ஓய்வு பெற்றதையடுத்து ஜெயதேவன் பதவியேற்றுள்ளார்.
- ✓ பன்னிரண்டாம் வகுப்பு தமிழ் பாடநூலில் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் குறித்த தகவல்கள் இடம் பெற்றுள்ளன.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.** இசுலாமிய கூட்டுறவு அமைப்பின் 14ஆவது உச்சிமாநாட்டை நடத்திய நகரம் எது?

A) பாக்தாத்

B) டமாஸ்கஸ்

C) மெக்கா ☑

D) தெஹ்ரான்

- ✓ மே.31 அன்று சவுதி அரேபியாவில் உள்ள மெக்காவில் நடந்த 14ஆவது இசுலாமிய உச்சிமாநாட்டின் போது, ஒரு வலுவான எதிர்வினையாக, ஜம்மு & காஷ்மீர் குறித்த இந்தியாவின் இறுதி அறிக்கையில், இசுலாமிய கூட்டுறவு அமைப்பின் தலையீட்டை இந்தியா நிராகரித்தது.
- ✓ இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கும் ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தின் பிரச்சனைகளில் தலையிடும் உரிமை இசுலாமிய கூட்டுறவு அமைப்புக்கு (OIC) இல்லை என இந்திய மத்திய வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது. இத்தகைய தேவையற்ற தலையீடல்களை OIC செய்யாமலிருக்க வேண்டும் எனவும் இந்தியா அப்போது வலியுறுத்தியது.
- ✓ முன்னதாக, இம்மாநாட்டில், ஜம்மு மற்றும் காஷ்மீர் மக்களின் சட்டபூர்வ உரிமைகளுக்கான தனது ஆதரவை OIC மீண்டும் உறுதிப்படுத்தியது. மேலும் ஜம்மு & காஷ்மீர் மாநிலத்திற்கு என சிறப்பு தூதர் ஒருவரையும் OIC நியமித்தது. OIC என்பது 53 இசுலாமிய பெரும்பான்மை நாடுகள் உட்பட மொத்தம் 57 உறுப்பு நாடுகளைக்கொண்ட ஒரு சர்வதேச அமைப்பாகும். இதன் அறிக்கைகள் / தீர்மானங்கள் போன்றவற்றுக்கு பின்னால் பாகிஸ்தான் போன்ற இந்திய எதிர்ப்பு ஆற்றல்கள் உள்ளன.

**2.** எந்தத் தேதியில், வன்தாக்குதலுக்கு ஆளான குழந்தைகளின் சர்வதேச தினம் (International Day of Innocent Children Victims of Aggression) கடைபிடிக்கப்படுகிறது?

A) ஜூன் 2

B) ஜூன் 5

C) ஜூன் 4 ☑

D) ஜூன் 3




- ✓ உடலளவில், மனதளவில் மற்றும் உணர்வு ரீதியான தாக்குதலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வலிகளை உணரும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.4 அன்று வன்தாக்குதலுக்கு ஆளான குழந்தைகளின் சர்வதேச தினம் கடைபிடிக்கப்படுகிறது. குழந்தைகளின் உரிமைகளை பாதுகாப்பத –ற்கான ஐ.நா.வின் உறுதிப்பாட்டை இந்நாள் உறுதிப்படுத்துகிறது.

**3.** எல் சால்வடாரின் புதிய அதிபராக பதவியேற்றுள்ளவர் யார்?

A) நயீப் புக்கேலே (Nayib Bukele) ☑



B) மோரிசியோ பூன்ஸ்

C) அந்தோனியோ சாகா

D) ஆல்பிரடோ கிறிஸ்டியானி

✓ பழமைவாத தொழிலதிபரான நயீப் புக்கேலே, எல் சால்வடாரின் புதிய அதிபராக பதவியேற்றுள்ளார். இவரது இந்தப் பதவியேற்பு, பழமைவாத தேசியவாதி குடியரசுக் கூட்டணிக்கும் (ARENA) வெளிச் செல்லும் பாராபுந்தோ மார்டியின் தேசிய விடுதலைக் கூட்டணிக்கும் இடையே முப்பது ஆண்டுகளாக இருந்த இருகட்சிகள் சார்ந்த அரசை உடைத்துள்ளது. புக்கேலே, சால்வடார உள்நாட்டுப் போர் முடிவடைந்ததில் இருந்து அதிபர் பதவியை வெல்லும் முதல் வேட்பாளராவார். இவர் அவ்விரண்டு முக்கியக் கட்சிகள் சார்பாகவும் போட்டியிடவில்லை.

**4.** "ஆப்கே பேட்டி – உங்கள் மகள்" திட்டம், பின்வரும் எந்த மாநில அரசுடன் தொடர்புடையது?

A) உத்தரப்பிரதேசம்



B) சத்தீஸ்கர்

C) மத்தியப்பிரதேசம்

D) இராஜஸ்தான் ☑

✓ இராஜஸ்தான் மாநில அரசு, அண்மையில், "ஆப்கே பேட்டி" திட்டத்தின்கீழ், பள்ளி மாணவிகளுக்கு வழங்கப்படும் நிதியுதவியையும், தேர்தல் பணியின்போது உயிர்துறந்த பணியாளர்களின் குடும்பங்க –ளுக்கு வழங்கப்படும் கருணைத்தொகையையும் அதிகரித்துள்ளது. "ஆப்கே பேட்டி" திட்டத்தின்கீழ், தந்தை / தாய் அல்லது இருவரையும் இழந்துவிட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவிகள் ஆண்டுதோறும் நிதியுதவி பெறுகிறார்கள்.

✓ வகுப்பு 1 முதல் 8 வரை பயிலும் மாணவிகளுக்கு, ரூ.1100 ஆக இருந்த உதவித் தொகை 2100 ஆகவும் வகுப்பு 9 முதல் 12 வரை பயிலும் மாணவிகளுக்கு ரூ.1500 ஆக இருந்த உதவித் தொகை 2500 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல், தேர்தல் பணியின்போது உயிர்துறந்த தேர்தல் பணியாளர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் கருணைத்தொகையை ரூ.15 லட்சத்திலிருந்து ரூ.20 லட்சமாக உயர்த்தி அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

**5.** இதர பிற்படுத்தப்பட்டோருக்கான (OBC) இட ஒதுக்கீட்டை 27 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ள மாநில அரசு எது?

A) உத்தரப்பிரதேசம் C) மத்தியப்பிரதேசம் ☑

B) இராஜஸ்தான் D) ஹரியானா



- மத்தியப்பிரதேச அரசு இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 14 சதவீதத்திலிருந்து 27 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இதற்கான தீர்மானம், அமைச்சரவை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் அமல்படுத்தப்பட்டால், இந்தியாவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு வழங்கிய முதல் மாநிலமாக மத்தியப்பிரதேசம் மாறும்.

- முன்னதாக மார்ச்.9 அன்று இந்த இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்காக மத்தியப் பிரதேச மாநில அரசு ஓர் அரசாணையை பிறப்பித்தது. இருப்பினும், மார்ச்.19 அன்று மத்தியப்பிரதேச உயர்நீதிமன்றம் இந்த அரசாணைக்கு தடை விதித்து தீர்ப்பளித்தது குறிப்பிடத்தக்கது.

**6.** அண்மையில் காலமான ஜஸ்பல் இந்தர் சிங் கல்ரா, எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?

A) அறிவியல்

B) சமையற்காரர் (Chef) ☑

C) பத்திரிகை

D) விளையாட்டு



- புகழ்மிக்க சமையல்காரரும், சமையல்சார் மறுமலர்ச்சியாளருமான ஜஸ்பல் இந்தர் சிங் கல்ரா (71), ஜூன்.4 அன்று புது தில்லியில் காலமானார். ‘இந்திய சமையல் பாணியின் பேரரசன்’ & ‘தேசத்தின் சுவையான உணவு தயாரிப்பாளர்’ போன்ற அடைமொழிகளை பெற்றுள்ள இவர், பொதுவாக ‘ஜிக்ஸ் கல்ரா’ என எல்லோராலும் அழைக்கப்பட்டார். பன்னாட்டு உணவு மற்றும் பான வல்லுநர்கள் சிறப்பு மையத்தில் இணைக்கப்பட்ட முதல் ஆசியர் இவர்தான்.

**7.** WHOஇன் புற கணக்குத் தணிக்கையாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

A) பிரமோத் குமார் மிஸ்ரா

B) பிரதீப் குமார் சின்ஹா

C) ராஜீவ் மெஹ்ரிஷி ☑

D) அருணா சுந்தரராஜன்



- 2020 முதல் 2023 வரையிலான நான்காண்டு காலத்திற்கு, உலக சுகாதார அமைப்பின் புற கணக்குத் தணிக்கையாளராக (External Auditor) இந்திய அரசாங்கத்தின் கணக்குத் தணிக்கைத் தலைவர் (CAG) ராஜீவ் மெஹ்ரிஷி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த மாதம் ஜெனீவாவில் நடந்த 72ஆவது உலக சுகாதார அவையில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- கடந்த மார்ச்சில், ரோமில், உணவு & வேளாண்மை அமைப்பின் புற கணக்குத் தணிக்கையாளராக தெரிவான பின்னர், நடப்பாண்டில் கணக்குத் தணிக்கைத் தலைவர் பெறும் 2ஆவது பெரிய சர்வதேச தணிக்கைப் பணியாகும் இது. தற்பொழுது, ஐ.நா அவையின் கணக்குத் தணிக்கையாளர்கள் வாரியத்திலும், ஐ.நா கணக்குத்தணிக்கையாளர்கள் குழுவின் துணைத்தலைவராகவும் ராஜீவ் உள்ளார்.

**8.** சமீபத்திய செய்திகளில் இடம்பெற்றுள்ள Enoplotrupes tawangensis, பின்வரும் எந்த வண்டின் புதிய இனமாகும்?

A) சாண வண்டு (Dung beetle) ☑

B) மலை தேவதாரு வண்டு

C) கரும்புள்ளிச் செவ்வண்டு

D) தேங்காய் முள் வண்டு



- ✓ Enoplotrupes tawangensis என்பது அருணாச்சலப்பிரதேச மாநிலத்தின் தவாங் மாவட்டத்தில் கண்டறியப்பட்ட சாண வண்டின் புதிய இனமாகும். பளபளக்கும் அடர் நீல நிறத்தில், 27 மி.மீ., அளவு உடைய இவ்வின வண்டுகள், வழக்கமான சாண வண்டுகளை விடவும் அளவில் பெரியதாக உள்ளன.
- ✓ இந்திய விலங்கியல் ஆய்வு மையத்தைச் சேர்ந்த கைலாஷ் சந்திரா மற்றும் தேவன்ஷூ குப்தா ஆகிய இரு அறிவியலாளர்கள் முதன்முதலில் இது சேகரிக்கப்பட்டது. இந்தியாவில் மட்டும் தோராயமாக 65,000 பூச்சியினங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 22,000 இனங்கள் வண்டினங்கள் ஆகும்.

**9.** எந்தத் தேதியில், 2ஆவது உலக மிதிவண்டி தினம் கடைபிடிக்கப்பட்டது?

A) ஜூன் 2

B) ஜூன் 5

C) ஜூன் 4

D) ஜூன் 3 ☑




- ✓ இரண்டாவது உலக மிதிவண்டி தினம், ஜூன்.3 அன்று ஐ.நா அவையால் கடைபிடிக்கப்பட்டது. எளிய, மலிவான, நம்பகமான, தூய்மை மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற நிலையான இந்தப் போக்குவரத்து முறையை ஊக்குவிப்பதற்காக இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. வகை 1 மற்றும் வகை 2 நீரிழிவு நோயாளிகளுக்கு நலமான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதுடன் தொடர்புப்படுத்தி இந்த நாள் ஊக்குவிக்கப்படுகிறது. மிதிவண்டி என்பது நிலையான போக்குவரத்துக்கான ஒரு சின்னமாகவும், நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கவும் நேர்மறையான செய்தியை அளிக்கிறது. மேலும், காலநிலைக்கு நேர்மறையான தாக்கத்தை இது ஏற்படுத்துகிறது.

**10.** கீழ்க்கண்ட நாடுகளுள், நாற்கரப் பாதுகாப்புப் பேச்சுவார்த்தையின் உறுப்பினர்கள் எவை?

A) இந்தியா, இரஷ்யா தென்கொரியா மற்றும் சீனா

B) இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ☑

C) இந்தியா, இந்தோனேசியா, மியான்மர் மற்றும் தாய்லாந்து



**D)** இந்தியா, நேபாளம், பூடான் மற்றும் வங்கதேசம்

- ✓ பாங்காக்கில் நடந்த, நடப்பாண்டின் நாற்கரப் பாதுகாப்புப் பேச்சுவார்த்தையில் (Quadrilateral Security Dialogue – QSD) இந்திய, அமெரிக்க, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். ஒரு கட்டற்ற, திறந்த மற்றும் உள்ளடக்கிய இந்திய – பசிபிக் பிராந்தியத்திற்கான அந்நாடுகளின் கூட்டு முயற்சிகள் குறித்து கலந்தாலோசனை நடத்தவும், பிராந்தியத்தில் விதிகள் அடிப்படையிலான உத்தரவைப் பாதுகாக்கவும் & ஊக்குவிப்பதற்கான அந்நாடுகளின் பங்களிப்பை உறுதிசெய்யவுமாக இந்தப் பேச்சுவார்த்தை நடந்தது.

- ✓ இந்தோ-பசிபிக் ஒப்பந்தம் மற்றும் திட்டங்களில் இந்த 4 நாடுகள் ஒன்றிணைந்தும், பிற ஆர்வமுள்ள நாடுகள் மற்றும் நிறுவனங்களோடு இணைந்தும் வழக்கமான ஆலோசனை சேவைகளை தொடர விரும்பும் அவர்களின் எண்ணத்தை அடிக்கோடிட்டுக் காட்டின. இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் முறைசாரா உத்திசார் குழுமமான Quad$_{இன்}$ ஒரு பகுதியாகும் இந்தக் கலந்தாலோசித்தல்கள்.

- ✓ சீனா, ஓர் உயிரி புவியமைப்பு மண்டலமான இந்தோ – பசிபிக்கில் அதன் இராணுவ இருப்பை விரிவுபடுத்த முயல்கிறது. கிட்டத்தட்ட அனைத்து தென் சீனக்கடல் பகுதிக்கும் சீனா உரிமை கோரி வருகிறது. அதேபோல், வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூனி மற்றும் தைவான் ஆகிய நாடுகளும் அதன் மீது எதிர் கோரல்களை வைத்து வருகின்றன.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ முகமது இஸ்மாயில் என்னும் இயற்பெயருடைய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் 124$_{ஆவது}$ பிறந்த தினம். காயிதே மில்லத் என்றால் உருது மொழியில், ‘வழிகாட்டும் தலைவர்’ என்று பொருள்.

- ✓ பள்ளிகளின் நிலை, அடிப்படை வசதிகள் மற்றும் இடைநிற்றல் ஆகிய தகவல்கள் குறித்து UDISE எனப்படும் கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை, தேசிய அளவில் ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது. அதில், மாநிலங்களின் அடிப்படையில் பள்ளி இடைநிற்றலை தடுப்பதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாகவும், தமிழ்நாட்டில் 86.2% பேர் பள்ளிப்படிப்பை முழுவதுமாக நிறைவு செய்வதாகவும் கூறப்பட்டுள்ளது.

- ✓ தில்லியில் இருந்தபடியே தமிழ்நாட்டுக்கான மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் அனுமதி, நிதி போன்றவற்றை பெறுவதற்கு புதிய அதிகாரியை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை துணைச்செயலாளர் R ராதாகிருஷ்ணன் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர், மத்திய அரசின் அனைத்து முக்கியமான திட்டங்கள், திட்டப்பரிந்துரைகள், நிலுவையிலுள்ள திட்டங்கள் போன்றவற்றைக் கவனித்து, துறை அதிகாரிகளுக்கு உதவி செய்வார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.** ‘கர்கா பிரஹார் – 2019’ என்னும் பயிற்சி சமீபத்தில் இந்திய இராணுவத்தால் எந்த மாநிலத்தில் நடத்தப்பட்டது?



A) ஹரியானா

B) உத்தரகாண்ட்

C) பஞ்சாப் ☑

D) ஜம்மு மற்றும் காஷ்மீர்

✓ இந்திய இராணுவமும், இந்திய விமானப்படையும் இணைந்து பஞ்சாப் சமவெளிகளில் ஒரு வார கால நீண்ட “Kharga Prahar – 2019” என்ற சிறப்புப் பயிற்சியை நடத்தியுள்ளன. மே.27இல் தொடங்கிய இந்தப் பயிற்சி, இராணுவத்தின் கர்கா படைப்பிரிவின் பல்வேறு பிரிவுகளாலும், அமைப்புகளாலும் மேற்கொள்ளப்பட்டது. இதில், இந்திய விமானப்படை விமானத்திலிருந்து இறங்குவதற்கான கூட்டுப் பயிற்சிகளும், தரைப்படையின் உதவியுடன் உருவகப்படுத்தப்பட்ட போர்க்கள வான் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

✓ இந்திய இராணுவத்தின் தாக்குதல் செயல்திறனில் 50% அளவுக்கு பெற்றுள்ள, ‘கர்கா படைப்பிரிவு’ என்று பொதுவாக அழைக்கப்படுகின்ற அம்பலாலாவைச் சார்ந்த 2 – Corps, அண்டைநாடான பாகிஸ்தானுடன் ஏதேனும் சிக்கல் அல்லது போர் நடத்த வேண்டிய தேவையேற்பட்டால், அதற்கான தாக்குதலைத் தொடங்க பணிக்கப்பட்டுள்ளது.

✓ 1971இல், மேற்கில் நிலைநிறுத்தப்பட்ட போது, இந்தப் படை, பாகிஸ்தான் பிரிவினையில் உதவியது. கார்கில் போரின்போது இச்சிறப்புப் படைப்பிரிவு, பாலைவனப்பகுதிகளில் பணியமர்த்தப்பட்டது. 1985ஆம் ஆண்டு முதல் அம்பாலாவிலிருந்து இந்தப் படை இயங்கி வருகிறது.

**2.** நடப்பாண்டு J C டேனியல் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?



A) ஸ்ரீ குமரன் தம்பி

B) ஷீலா ☑

C) ஜோஷ் பிரகாஷ்

D) ஆறன்முளா பொன்னம்மா

✓ நடப்பாண்டின் பெருமைமிகு J C டேனியல் விருதுக்கு, மூத்த மலையாள நடிகையும், இயக்குநருமான ஷீலா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். திரையுலகில் அவரது பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக அவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. 2005ஆம் ஆண்டில் இந்த விருதைப் பெற்ற ஆறன்முளா பொன்னம்மாவுக்குப் பிறகு, இவ்விருதைப் பெறும் இரண்டாவது பெண்மணி இவராவார்.

- ✓ ரூ.5 லட்சம் ரொக்கப்பரிசையும், பாராட்டுப் பத்திரத்தையும் உள்ளடக்கிய இவ்விருது, வரும் ஜூலை.27 அன்று நடைபெறவுள்ள ஒரு விழாவில் அவருக்கு வழங்கப்படும். இது மலையாளத் திரையுலகில் கேரளாவின் மிகவுயர்ந்த விருதாகும். மலையாளத் திரையுலகின் முதல் 'ஊமைப்பட'த்தை இயக்கிய J C டேனியலின் பெயரால் இவ்விருது வழங்கப்படுகிறது.

- ✓ ஷீலா தனது இரசிகப் பெருமக்களால் பொதுவாக ஷீலாம்மா என அழைக்கப்படுகிறார். 1960களின் முற்பகுதியில், M G. இராமச்சந்திரன் நடித்த 'பாசம்' என்ற திரைப்படத்தின் மூலம் இவர் திரையுலகுக்கு அறிமுகமானார். கேரள மாநில அரசின் முதலாவது 'சிறந்த நடிகை' விருது, 1969இல் வெளிவந்த 'கள்ளி செல்லம்மா' என்ற திரைப்படம் மூலம் இவருக்குக் கிடைத்தது. 2005இல் வெளிவந்த மலையாளத் திரைப்படமான 'அகலே' என்ற திரைப்படத்தில் நடித்ததற்காக சிறந்த துணை நடிகைக்கான தேசிய திரைப்பட விருதை இவர் வென்றார். கிட்டத்தட்ட 130 படங்களில் ஒரே நடிகருடன் (மறைந்த நடிகர் பிரேம் நசீர்) நடித்தமைக்கான கின்னஸ் உலக சாதனையையும் இவர் கொண்டுள்ளார்.

**3.** அண்மையில் காலமான தின்யார் காண்ட்ராக்டர், எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?



A) விளையாட்டு

B) திரைத்துறை ☑

C) புகைப்படக்கலை

D) கலை

- ✓ மூத்த நடிகரும், நாடகக்கலை மேதையுமான தின்யார் காண்ட்ராக்டர் (79), ஜூன்.5 அன்று மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் காலமானார். திரைப்படங்களில் அவரது நகைச்சுவை கதாபாத்திரங்களுக்காக புகழ்பெற்ற இவருக்கு, நடப்பாண்டில் 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பட்டது.

**4.** USIBC நடப்பாண்டு உலகளாவிய தலைமைத்துவ விருதுக்கு (USIBC Global Leadership Award) தெரிவாகியுள்ள இந்திய – அமெரிக்கர் யார்?



A) ஆனந்த் சந்திரசேகரன்

B) அசோக் அமிர்தராஜ்

C) சுந்தர் பிச்சை ☑

D) ஜெய் சந்திரசேகர்

- ✓ அமெரிக்க – இந்திய தொழில் கழகம் (USIBC) வழங்கும் உலகளாவிய தலைமைத்துவ விருதுக்கு, கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி (CEO) சுந்தர் பிச்சை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருடன், அமெரிக்க பங்குச்சந்தையான NASDAQஇன் தலைவர் அடேனா பிரைட்மேனும் அந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- ✓ வாஷிங்டனில் நடைபெறவுள்ள "இந்தியா ஐடியா" மாநாட்டில் அவர்களிருவருக்கும் அந்த விருது வழங்கப்படும். இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகம் கடந்த 5 ஆண்டுகளில்

150 % அதிகரித்துள்ளதில் கூகுள், NASDAQ போன்றவை முக்கியப் பங்கு வகித்துள்ளதால், இந்த விருதை USIBC வழங்குகிறது.

**5.** எந்த நாட்டின் பெண்கள் ஹாக்கி அணி, கேன்டோர் பிட்ஸ்ஜெரால்ட் U21 சர்வதேச பட்டத்தை வென்றுள்ளது?

A) இந்தியா ☑

B) சீனா

C) பூடான்

D) வங்கதேசம்



✓ இந்திய ஜூனியர் பெண்கள் ஹாக்கி அணி, ஜூன்.4 அன்று அயர்லாந்து டப்ளினில் நடந்த இறுதிப் போட்டியில், அயர்லாந்தை 1-0 என்ற கணக்கில் வீழ்த்தி, நடப்பாண்டின் கேன்டோர் பிட்ஸ்ஜெரால்ட் (Cantor Fitzgerald) 4 நாட்டு அணிகளுக்கு இடையேயான U21 சர்வதேச பட்டத்தை வென்றது. நான்கு ஆட்டங்களில் 3 கோல் அடிக்கப்பட்டது. மும்தாஜ் கான், போட்டியின் மிக அதிக கோலடித்தவராவார்.

**6.** UNGAவின் 74ஆவது அமர்வுக்கான தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திஜ்ஜானி முகமது – பண்டே (Tijjani Muhammad – Bande), எந்த ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்தவராவார்?

A) நைஜீரியா ☑

B) எகிப்து

C) தென்னாப்பிரிக்கா

D) துனிசியா



✓ ஐ.நாவுக்கான நைஜீரியாவின் தூதர் திஜ்ஜானி முகமது – பண்டே, ஐ.நா பொது அவையின் 74ஆவது அமர்வுக்கான தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். விதிகளின்படி, பொது அவையின் 74ஆவது அமர்வுக்கான தலைவர் ஏதேனும் ஓர் ஆப்பிரிக்க நாட்டிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தற்சமயம் தலைவராக உள்ள எக்குவடோரின் மரியா பெர்னாண்டோ எஸ்பினோசா, வரும் செப்டம்பர் மாதத்தில் ஓய்வுபெறவிருக்கிறார்.

**7.** இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) மிருத்யஞ்சை மகாபத்ரா (Mrutyunjay Mahapatra) ☑

B) K J இரமேஷ்

C) அவினாஷ் சந்தர்

D) S கிறிஸ்டோபர்



- புகழ்பெற்ற அறிவியலாளரும், புயல் எச்சரிக்கை வல்லுநருமான மிருத்யஞ்சை மகாபத்ரா, இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். பொதுவாக 'இந்தியாவின் புயல் மனிதர் – Cyclone man of India' என அழைக்கப்படும் இவர், வரும் ஆகஸ்ட்.11 அன்று பதவியேற்றுக்கொள்ளவுள்ளார். அடுத்த 5 ஆண்டுகளுக்கு அவர் இப்பதவியில் தொடர்வார்.

- இந்திய வானிலை ஆய்வு மையத்தின் புயல் எச்சரிக்கை பிரிவில் பணியாற்றும் மகாபத்ரா மற்றும் அவரது குழுவினரின் புயல்கள், காற்றின் வேகம் அவற்றின் தாக்கம் குறித்த துல்லியமான முன் கணிப்பிற்காக பாராட்டப்பட்டனர். சமீபத்திய 'பானி' புயலின்போது உரிய நேரத்தில் அவர்களால் வழங்கப்பட்ட துல்லியமான முன்னெச்சரிக்கைகள், இலட்சக்கணக்கான மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டுசெல்ல அதிகாரிகளுக்கு உதவியது. கடந்த 6 ஆண்டுகளில், பைலின் (2013), ஹூட் ஹூட் (2014) மற்றும் கிழக்குக் கடற்கரையை தாக்கிய தித்லி (2018) உட்பட பல்வேறு புயல்களுக்கு புயல் எச்சரிக்கை பிரிவு, துல்லியமான முன்கணிப்புகளை வழங்கியுள்ளது.

- நாட்டில் வானிலை / காலநிலை தொடர்பான கணிப்புகளுக்கு இந்திய வானிலை ஆய்வு மையமே பொறுப்பாகும். புயல்கள், புழுதிப் புயல்கள், பெருமழை மற்றும் பனி, குளிர் மற்றும் வெப்பக் காற்று வீசல் போன்றவற்றுடன் கடுமையான வானிலை நிகழ்வுபற்றி மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பதற்கும் இது பணிக்கப்பட்டுள்ளது.

**8.** நடப்பாண்டு உலக சுற்றுச்சூழல் தினத்துக்கான கருப்பொருள் என்ன?

A) Green Economy

B) Beat Air Pollution ☑

C) Connecting People to Nature

D) Go wild for life




- சுற்றுச்சூழல் மற்றும் குறிப்பிட்ட சுற்றுச்சூழல் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.5 அன்று உலக சுற்றுச்சூழல் தினம் கடைபிடிக்கப்படுகிறது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள் "காற்று மாசை ஒழிப்போம்" என்பதாகும். உலகளாவிய சிக்கலாக இருந்துவரும் காற்று மாசை எதிர்த்துப் போராடுவதற்கான ஓர் அழைப்பாக இது கருதப்படுகிறது.

- நடப்பாண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தை கொண்டாடுவதற்காக மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது அண்மையில் காற்று மாசு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 'ஹவா ஆனே தே' என்னும் கருத்துப்பாடலை வெளியிட்டுள்ளது. சாந்தனு முகர்ஜி, கபில் சர்மா, சுனிதி சௌகான் மற்றும் சங்கர் மகாதேவன் ஆகியோரால் பாடப்பெற்ற இப்பாடலை ஸ்வநந்த் கிர்கிரே எழுதியுள்ளார்.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், இந்தத் தினத்தன்று #SelfiewithSapling என்றவொறு பரப்புரையை தொடங்கினார். மரக்கன்று ஒன்றை நட்டு, அதனுடன் படமெடுத்து அதனைச் சமூக ஊடகங்களில் பகிருமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

**9.** ‘Cricket World Cup: The Indian Challenge’ என்ற நூலின் ஆசிரியர் யார்?




A) ஸ்ரீகந்தன் நாயர்

B) சஞ்சய் மஞ்ச்ரேக்கர்

C) ஆஷிஷ் ரே ☑

D) ஹர்ஷா போக்லே

- ✓ ‘Cricket World Cup: The Indian Challenge’ என்ற நூலை மூத்த செய்திபரப்பாளரும், எழுத்தாளருமான ஆஷிஷ் ரே எழுதியுள்ளார். போட்டியின் வரலாற்றை இந்தியாவின் பார்வையிலிருந்து கூறும் இந்த நூலை இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியத்தின் தலைமை அதிகாரி டாம் ஹாரிசன் முறையாக வெளியிட்டுள்ளார். இந்நூல், 1975 – 2015 வரை நடைபெற்ற அனைத்துப் போட்டிகளையும் மீளாய்வு செய்துள்ளது. மேலும் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2019 உலகக்கோப்பை குறித்த முன்னோட்டத்தையும் இந்த நூல் வழங்குகிறது.

- ✓ 44 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட உலகக்கோப்பையின் முதல் போட்டியிலிருந்து இந்தியா பங்குபெற்ற அனைத்து போட்டிகள் குறித்தும், ஒவ்வொரு அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் குறித்தும், அதில் இந்தியா பங்கேற்றிருந்தாலும் இல்லையென்றாலும் கூட அது குறித்து இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**10.** 2019 சர்வதேச வலுதளர்ந்தோர் உச்சிமாநாடு, எந்த நகரத்தில் நடைபெறவுள்ளது?

A) புது தில்லி

B) நியூயார்க்

C) பாரிஸ்

D) பியூனஸ் ஏர்ஸ் ☑

GLOBAL DISABILITY SUMMIT ARGENTINA 2019

- ✓ இரண்டாவது சர்வதேச வலுதளர்ந்தோர் உச்சிமாநாடு, வரும் 6–8ஆம் தேதி வரை, அர்ஜென்டினாவின் பியூனஸ் ஏர்ஸில் நடைபெறவுள்ளது. இந்தியாவிலிருந்து, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் தாவர்சந்த் கெலோட் இந்த உச்சிமாநாட்டில் கலந்துகொள்வார். வலுதளர்ந்தோரை (Persons with Disabilities – PwD) அதிகாரமிக்கவர்களாகவும், உள்ளடக்கியவர்களாகவும் மாற்றுவதில் உலகெங்கும் உள்ள சிக்கல்கள் குறித்து கலந்தாலோசிக்கவும், எவரையும் சாராமல் கண்ணியமான வாழ்க்கை வாழ்வதற்கு அவர்கள் இயங்குவதற்கான ஒரு வழிமுறையை உருவாக்கவேண்டும் என்பதே இந்த உச்சிமாநாட்டின் நோக்கமாகும்.

- ✓ ஜூன் 9–10 ஆகிய தேதிகளில் இருநாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வளர்த்தெடுப் -பதற்காக அர்ஜென்டினா அரசாங்கத்துடனான இருதரப்பு விவாதங்களில் இந்திய பிரதிநிதிகள் பங்கேற்பார்கள்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.** முதலாவது SDG பாலின அட்டவணையில் இந்தியாவின் தரநிலை (Rank) என்ன?

A) 106ஆவது

B) 95ஆவது ☑

C) 84ஆவது

D) 77ஆவது




✓ முதலாவது SDG பாலின அட்டவணையில், 129 நாடுகளில் இந்தியா 95ஆவது இடத்தில் உள்ளது. பன்னாட்டளவில் அமைக்கப்பட்டுள்ள இலக்குகளுக்கு எதிராக பாலின சமத்துவத்தை அடைவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை இது அளவிடுகிறது. இந்த அட்டவணையை 'Equal Measures 2030' என்ற நிறுவனம் தயாரித்துள்ளது.

✓ இந்நிறுவனம், ஆப்பிரிக்க பெண்கள் மேம்பாடு மற்றும் தகவல் தொடர்பு வலையமைப்பு, பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை, சர்வதேச பெண்கள் சுகாதார கூட்டணி மற்றும் சர்வதேச திட்டம் உள்ளிட்ட உள்நாட்டு சமூகம் மற்றும் மேம்பாடு மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த பன்னாட்டு மற்றும் பிராந்திய அமைப்புக்களிடையே கூட்டு வைத்துள்ளது.

✓ ஒட்டுமொத்த அட்டவணையின் மதிப்பு, 0–100 என்ற அளவீட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது. 100 மதிப்பெண்கள் – அடிப்படைச் சுட்டிகளுடன் (Indicators) தொடர்புடைய பாலின சமத்துவ அடைதலை குறிக்கிறது. 50 மதிப்பெண்கள் – ஒரு நாடு அடிப்படைச்சுட்டிகளுடன் தொடர்புடைய பாலின சமத்துவ அடைதலில் சரிபாதி இலக்கை எட்டியுள்ளதை குறிக்கிறது.

✓ 56.2 மதிப்பெண்கள் பெற்ற இந்தியா, 'மிக மோசமான' பிரிவில் இடம்பெற்றுள்ள 43 நாடுகளில் ஒன்றாக இடம்பிடித்துள்ளது. டென்மார்க், பின்லாந்து, சுவீடன், நார்வே, நெதர்லாந்து, சுலோவனியா, ஜெர்மனி, கனடா, அயர்லாந்து மற்றும் ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் இந்த அட்டவணையின் முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ளது.

**2.** அண்மையில் காலமான லால்டிங்லியானா சைலோ (Laldingliana Sailo), எந்த செய்தித் தொலைக்காட்சியின் குறிப்பிடத்தக்க செய்தி ஆசிரியராக இருந்தார்?

A) ஜீ செய்திகள்

B) தூர்தர்ஷன் ☑

C) என் டி டி வி

D) சி என் என்

✓ தூர்தர்ஷன் செய்தித் தொலைக்காட்சி மற்றும் அகில இந்திய வானொலியின் (AIR) முன்னாள் செய்தி ஆசிரியரான லால்டிங்லியானா சைலோ (76), ஐசாலில் காலமானார். இந்திய தகவல் சேவையில் (IIS)

மூத்த அதிகாரியாக இருந்த இவர், 1972ஆம் ஆண்டில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறையின் கீழ், கள விளம்பரத் துறை அலுவலராக பணியமர்த்தப்பட்டார். கோகிமா பிராந்தியத்திற்கான கள விளம்பரத் துறை தலைமை இயக்குநரகத்தின் இயக்குநராக இருந்து அவர் ஓய்வுபெற்றார்.

**3.** தில்லி உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ளவர் யார்?

A) திருபாய் நரன்பாய் படேல் ☑

B) என் வி ரமணா

C) தனஞ்செய ஒய் சந்திரசூத்

D) ஜஸ்டி செலமேஸ்வர்



- ✓ தில்லி உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக (Chief Justice) நீதிபதி திருபாய் நரன்பாய் படேல் நியமிக்கப்பட்டுள்ளார். ராஜ் நிவாஸில் நடந்த பதவியேற்பு விழாவில், துணைநிலை ஆளுநர் அனில் பைஜால், நீதிபதி படேலுக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். முன்னதாக, நீதிபதி படேல், ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்தில் பணியிலிருந்தார்.
- ✓ உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் பரிந்துரைக் குழுவானது (Collegium) தில்லி உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிப்பதற்கு அவரது பெயரை பரிந்துரைத்தது. தில்லி உயர்நீதிமன்றத்தில் 60 நீதிபதிகள் வரை இருக்கலாம் என்னும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில், தற்போதைய பற்றாக்குறை எண்ணிக்கை 24 என உள்ளது.

**4.** எந்த நாட்டுடனான வரித் தரவு ஒப்பந்தத்தை இந்தியா அண்மையில் அறிவித்தது?

A) பனாமா

B) மார்ஷல் தீவுகள் ☑

C) கியூபா

D) கௌதமாலா



- ✓ மார்ஷல் தீவுகளுடனான ஒரு வரித் தகவல் பரிமாற்ற ஒப்பந்தத்தை (Tax Information Exchange Agreement – TIEA) இந்தியா அறிவித்துள்ளது. இது வங்கியியல் மற்றும் உரிமையாளர் தகவல்களை இருதரப்பும் பகிர்ந்துகொள்ளவும், ஒரு நாட்டின் அதிகாரிகள் மற்றொரு நாட்டில் வரிச் சோதனைகள் நடத்துவதற்கும் அனுமதிக்கிறது. 2016ஆம் ஆண்டு மார்ச்.18 அன்று, மார்ஷல் தீவுகளின் தலைநகரான மஜூரோவில், வரி சம்பந்தமான தகவல் பரிமாற்றத்திற்கான TIEA ஒப்பந்தம் செய்யப்பட்டது. 2019 மே 21 அன்று, TIEAஐ இந்தியா அறிவித்தது.
- ✓ வரி வெளிப்படைத்தன்மை பற்றிய சர்வதேச தர நிலைகளின் அடிப்படையில் அமைந்துள்ள இந்த ஒப்பந்தம் கோரிக்கையின் அடிப்படையில் தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும் உதவுகிறது. இந்தியா மற்றும் மார்ஷல் தீவுகளுக்கு இடையே பரஸ்பர கூட்டுறவை

இந்த ஒப்பந்தம் அதிகரிக்கிறது. மேலும், வரி சம்பந்தப்பட்ட பயனுள்ள கட்டமைப்பை வழங்குவதன் மூலம் வரி ஏய்ப்பு மற்றும் வரி தவிர்ப்பை கட்டுப்படுத்துகிறது.

**5.** பின்வரும் மெட்ரோக்களில் கழிவிலிருந்து ஆற்றல் (waste – to – energy) பெறும் இந்தியாவின் முதல் திட்டமாக மாறியுள்ள மெட்ரோ எது?

A) தில்லி மெட்ரோ ☑

B) சென்னை மெட்ரோ

C) பெங்களூரு மெட்ரோ

D) கொல்கத்தா மெட்ரோ

✓ கழிவிலிருந்து ஆற்றல் உற்பத்தி செய்யும் ஆலையிலிருந்து ஆற்றலைப் பெறும் இந்தியாவின் முதல் திட்டமாக தில்லி மெட்ரோ மாறியுள்ளது. தில்லி மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கூற்றுப்படி, இந்தத் திட்டம், பிரதமர் மோடியின் "தூய்மை இந்தியா திட்ட"த்துடன் ஒத்துள்ளது. கழிவு மேலாண்மை மற்றும் கழிவுப்பொருட்களை பயனுள்ள முறையில் மீண்டும் பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இது உதவும். காசிபூரில் உள்ள 12 MW திறன்கொண்ட ஆலையிலிருந்து 2 MW மின்சாரத்தைப் பெற தில்லி மெட்ரோ தொடங்கியுள்ளது.

✓ இவ்வாலையிலிருந்து ஆண்டொன்றுக்கு தோராயமாக 17.5 மில்லியன் அலகுகளை தில்லி மெட்ரோ இரயில் நிறுவனம் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆலையின் ஆற்றல் உற்பத்தியை பொறுத்து இந்த அளவு மாறுபடும். கிழக்கு தில்லி கழிவுப்பொருள் பக்குவப்படுத்துதல் நிறுவனத்தால் (EDWPCL) அமைக்கப்பட்டுள்ள இவ்வாலை, தில்லி அரசு, கீழை தில்லி மாநகராட்சி மற்றும் EDWPCL முதலியவை சம்பந்தப்பட்ட ஒரு பொது தனியார் கூட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை, சுமார் 8 மில்லியன் டன் அளவிலான பைங்குடில் வாயு வெளியீட்டை குறைக்கும்.

**6.** நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் தலைவர் யார்?

A) ராஜ்நாத் சிங் ☑



B) நரேந்திர மோடி

C) அமித்ஷா

D) நிர்மலா சீதாராமன்

✓ நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் தலைவராக மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், பிரதமர் மோடி தலைமையிலான அரசியல் விவகாரங்களுக்கான அனைத்து முக்கியக் குழுக்களிலும் இவர் ஒருபகுதியாக இருப்பார்.

✓ முதலீடு மற்றும் வளர்ச்சி பற்றிய அமைச்சரவைக் குழு, வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு பற்றிய அமைச்சரவைக் குழு ஆகிய மோடி அரசால் அமைக்கப்பட்ட 2 புதிய குழுக்களின் உறுப்பினராகவும்

ராஜ்நாத் நியமிக்கப்பட்டுள்ளார். வளர்ச்சி மற்றும் முதலீட்டின் உந்துதலுக்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த இரண்டு குழுக்களும் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் இருக்கும்.

**7.** 2018 டாம் டாம் போக்குவரத்து அட்டவணையின்படி, உலகின் மிகவும் நெரிசலான நகரம் எது?



A) லிமா

B) புது தில்லி

C) மாஸ்கோ

D) மும்பை ☑

✓ டாம் டாம் என்ற நிறுவனம் 'Traffic Index-2018' என்ற தலைப்பில் நடத்திய ஆய்வில், நெரிசல் அளவு 65 சதவீதத்துடன் மும்பை நகரம் முதலிடத்தில் உள்ளது. புது தில்லி 4ஆவது (58%)இடத்தை பிடித்துள்ளது. கொலம்பியா தலைநகர் போகோடா (63% ) 2ஆவது இடத்திலும், பெரு தலைநகர் லிமா (58%) 3ஆவது இடத்திலும், ரஷ்ய தலைநகர் மாஸ்கோ (56%) 5ஆவது இடத்திலும் உள்ளது. கடந்த 2018ஆம் ஆண்டில், 56 நாடுகளில், 403 நகரங்களில், போக்குவரத்து நெரிசலினால் ஏற்படும் தாமதம் குறித்து இந்த ஆய்வு நடந்தது. இந்த ஆய்வில், மும்பை சாலைகளில் பயணிக்க நள்ளிரவு 2 மணி முதல் அதிகாலை 5 மணி வரை மட்டுமே உகந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8.** 2019 புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசினை வென்றவர் (Women's Prize for Fiction) யார்?




A) சதி ஸ்மித்


B) கமிலா ஷம்சி

C) தயாரி ஜோன்ஸ் (Tayari Jones) ☑

D) கடே மோசே

✓ அமெரிக்க எழுத்தாளரான தயாரி ஜோன்ஸ், "An American Marriage" என்னும் தனது புதினத்துக்காக நடப்பாண்டின் புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசை வென்றுள்ளார். ஓர் இளம் ஆப்பிரிக்க அமெரிக்கருக்கு அளிக்கப்பட்ட தவறான தண்டனை பற்றியும் அது அவரின் திருமணத்தை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றியும் இந்நூல் சித்தரிக்கின்றது. £30,000 ரொக்கப் பரிசும், 'பெஸ்ஸி' என்னும் ஒரு வெண்கல சிலையும் வழங்கப்பட்டது. இந்தப் பரிசு, பெண்களின் படைப்பாற்றல்களை கொண்டாடும் மிகப்பெரிய சர்வதேச கொண்டாட்டங்களுள் ஒன்றாகும்.

**9.** NITI ஆயோக்கின் புதிதாக நியமிக்கப்பட்ட துணைத்தலைவர் யார்?



A) ராஜிவ் குமார் ☑

B) V K சரஸ்வத்

C) ரமேஷ் சந்த்

D) V K பால்

- முக்கிய அமைச்சரவை அமைச்சர்களை பதவிவழி உறுப்பினர்களாக இணைத்து பிரதமர் நரேந்திர மோடி, சமீபத்தில் கூட்டுக்கொள்கையுடைய மதியுரையகமான (think-tank) மாறிவரும் இந்தியாவின் தேசிய நிறுவனத்தை (National Institution of Transforming India - NITI) மறுசீரமைத்துள்ளார். பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித்ஷா, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் விவசாய அமைச்சர் நரேந்திர சிங் தோமர் ஆகியோர் மோடி தலைமையிலான இம்மதியுரையகத்தின் பதவிவழி உறுப்பினர்களாக உள்ளனர்.

- ரமேஷ் சந்த், V K சரஸ்வத் மற்றும் V K பால் முதலிய முழுநேர உறுப்பினர்களுடன் இணைந்து இதன் துணைத்தலைவராக ராஜிவ் குமார் தொடர்வார். வரும் ஜூன்.15 அன்று பிரதமர் தலைமையிலான 5ஆவது NITI ஆயோக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் நீர் மேலாண்மை, விவசாயம் மற்றும் தேசப் பாதுகாப்பு உள்ளிட்டது தொடர்பாக பல்வேறு முக்கியப் பிரச்சனைகள் ஆலோசிக்கப்பட உள்ளன.

- NITI ஆயோக் கவுன்சிலில் அனைத்து மாநில முதலமைச்சர்கள், (துணை நிலை) ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றும் மூத்த அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் இடம்பெற்றிருப்பார்கள். புதிய மோடி அரசின் கீழ் நடைபெறும் முதல் கூட்டம் இதுவாகும். முந்தைய திட்டக்குழுவுக்கு மாற்றாக 2015 ஜன.1 அன்று மத்திய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் NITI ஆயோக் நிர்மாணிக்கப்பட்டது.

**10.** எந்த ஆப்பிரிக்க நாட்டில், சினாய் தீபகற்பம் (Sinai Peninsula) அமைந்துள்ளது?

A) துனிசியா

B) அல்ஜீரியா

C) எகிப்து ☑

D) லிபியா




- சினாய் தீபகற்பம் என்பது எகிப்தில் உள்ள ஒரு தீபகற்பமாகும். இது வடக்கே மத்தியதரைக் கடலுக்கும், தெற்கே செங்கடலுக்கும் இடையில் ஆப்பிரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் ஒரு நிலப்பாலமாக உள்ளது. சமீபத்திய செய்திகளில் இது இடம்பெற்றுள்ளது. காரணம்-சினாய் தீபகற்பத்திலுள்ள ஒரு சோதனைச் சாவடியில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு, பதிலடி கொடுக்கும் வகையில் எகிப்திய பாதுகாப்புப் படைக -ளால் சந்தேகத்திற்குட்பட்ட 14 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

- வடக்கத்திய சினாய் தீபகற்பத்தில் உள்ள ஒரு சோதனைச் சாவடியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 8 எகிப்திய காவல்துறை அதிகாரிகள் பலியாகினர். இந்தத் தாக்குதலுக்கு இசுலாமிய அரசு தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இத்தாக்குதல், எல்-அரிஷ் நகரின் மேற்குப் பகுதியில் இடம்பெற்றது. அப்போது அங்கிருந்த மக்கள் ரமலான் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ ஆண்டு முழுவதும் 24 மணி நேரமும் கடைகள், வணிக நிறுவனங்களைத் திறந்து வைக்க வகை செய்யும் உத்தரவை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. இதற்கான உத்தரவை தொழிலாளர் நலன் & வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் சுனில் பாலீவால் அண்மையில் பிறப்பித்தார். இந்த ஆணை மூன்றாண்டு காலத்திற்கு பொருந்தும்.
- ✓ முதன்முறையாக இந்தியக் கடற்கரைப் பகுதியிலும், நீருக்கடியிலும் உள்ள குப்பைகளைத் தூய்மைப் படுத்தும் முயற்சி உலக சுற்றுச்சூழல் தினத்தன்று (05.06.2019) சென்னை, கோவளம் கடற்கரையில் மேற்கொள்ளப்பட்டது. அப்போது, 500 கிலோ குப்பை இரண்டே மணி நேரத்தில் அள்ளப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.
- ✓ சேலத்தில் கட்டப்பட்டு வரும் ஈரடுக்கு மேம்பாலப் பணியின் ஒருபகுதியான AVR ரவுண்டானா முதல் இராமகிருஷ்ணா சாலை சந்திப்பு வரை 2.5 கி.மீ., நீளமுள்ள புதிய மேம்பாலம் திறக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம், தமிழ்நாட்டின் மிகநீண்ட ஈரடுக்கு மேம்பாலம் என்பது குறிப்பிடத்தக்கது.